வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. : 21/ 2025

எனது இல.**NP/07/10/04/85**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்
18.07.2025

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2025

1. அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2013.12.11ம் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப்பிரமாணக்குறிப்பை தழுவித் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக்குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அச்சேவைப்பிரமாணக்குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்களுக்கும், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களில் 50% ஆன அளவு திறமையின் அடிப்படையில் பதவியுயர்த்துவதன் மூலம் நிரப்பப்படும். **விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.08.11 ஆகும்.**

2. 2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் **MN 07-2025** சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் இதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. **71,240 – 11x 1,360 – 18 x 1,850 – 119,500/=** ஆகும். நியமனம் செயல்வலுப்பெறும் திகதி தொடக்கம் குறித்த இச் சுற்றறிக்கையின் உப அட்டவணை III இன் ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும்.

3. **மதிப்பீட்டு முறை**

இவ்வெற்றிடங்களில் 50% ஆனவை திறமை அடிப்படையில் நிரப்பப்படும் என்பதோடு, நிரப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, **அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறமையடிப்படையில் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையின் கீழ் நடாத்தப்படும் போட்டிப்பரீட்சையில் முதலில் நடைபெறும் போட்டிப் பரீட்சையின் இறுதித் திகதிக்கு கணிப்பிடப்படும்.** அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கையை குறித்த பரீட்சையின் இறுதித் திகதிக்குப் பின்னர் மீண்டும் பகிரங்க அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் வெற்றிடங்களின் அளவு மீண்டும் திருத்தியமைக்கப்படமாட்டாது.

இதன்படி வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்பும் விடயஆய்வும் எழுத்துப் பரீட்சைக்கு குறைந்தபட்சப் புள்ளியாக 40 இனைப் பெற்று சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் போட்டிப்பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வடக்கு மாகாணப் பொதுச் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும். அவ்வாறு கிடைக்கப்பெறும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையின் மூலம் விண்ணப்பதாரிகளின் சேவைமூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் வழங்கப்படுவதோடு அடிப்படை தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளும் சேவைமூப்பு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளினதும் மொத்த கூட்டுத்தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் திறமைநிலை தீர்மானிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| • உளச்சார்பும் விடய ஆய்வும் (எழுத்துப்பரீட்சை) | 100 புள்ளிகள் | (காலம் 1 ½ மணித்தியாலங்கள்) |
| • சேவை மூப்பு | 60 புள்ளிகள் | |
| • அனுபவம் | 40 புள்ளிகள் | |
| மொத்தப் புள்ளிகள் | 200 புள்ளிகள் | |

3.1. உளச்சார்பும் விடய ஆய்வும் - எழுத்துப்பரீட்சை ( காலம்: $1^1/_2$ மணித்தியாலங்கள், 100 புள்ளிகள் )

பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இப்பரீட்சை நடாத்தப்படும் திகதி அறிவிக்கப்படும். உளச்சார்பு மற்றும் விடய ஆய்வு தொடர்பான எழுத்துப் பரீட்சையின் வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியிருக்கும்.

(அ) முதலாம் பகுதி (40 புள்ளிகள்)

சகல வினாக்களும் அலுவலக நிர்வாகத்துடன் தொடர்புறுவதுடன் அங்கு பொது அறிவு, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தர்க்க ரீதியாகத் தீர்ப்பு வழங்கும் திறன் மற்றும் அலுவலக நிர்வாகம் சம்பந்தமான பிரச்சனைகளும் முன்வைக்கப்படும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வினாக்கள் காணப்படும். நேரம் 45 நிமிடங்கள் ஆகும்.

(ஆ) இரண்டாம் பகுதி (60 புள்ளிகள்)

அலுவலக நிர்வாகத்துடன் தொடர்புடைய விடய ஆய்வு வினாவுக்கு உரித்தாக விடையளிக்குமாறு பரீட்சார்த்தியானவர் வேண்டப்படுவார். இவ் வினாத்தாள் ஒரு பந்தி அல்லது சில பந்திகளின் வாயிலாக வினாத்தாள் தயாரிக்கப்படும். நேரம் 45 நிமிடங்கள் ஆகும்.

3.2. சேவை மூப்பு

மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இல் 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையினைப் பூர்த்திசெய்த பின்னர், அலுவலரினால் பூர்த்தி செய்யப்படும் ஒவ்வொரு வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காக 06 புள்ளிகள் என்ற வீதத்தில் ஆகக்கூடியது 60 புள்ளிகளுக்கு உட்பட்டு சேவை மூப்பிற்கான புள்ளிகள் வழங்கப்படும். இந் நோக்கத்திற்காக ஒரு வருடத்திற்கு குறைவான ஆனால் 06 மாதங்களிற்கு கூடிய காலப்பகுதிக்கு 03 புள்ளிகள் ஒதுக்கப்படும். 06 மாதங்களிற்கு குறைந்த காலப்பகுதிக்காக எதுவித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.

15 வருடங்களில் தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காகவும் 2013.04.02ஆந் திகதி புதிய சேவைப்பிரமாணக்குறிப்பை நடைமுறைப்படுத்தும் திகதியில் தரம் II இற்கு நியமனம் பெற்று 10 வருடங்களுக்கு கூடுதலான சகல உத்தியோகத்தருக்கும் தரம் II இற்கு நியமனம் பெற்று 10 வருடங்கள் பூர்த்தியானதன் பின்னர் தரம் II இல் இருக்கும் மேலதிக ஒவ்வொரு வருடத்திற்காகவும் மேலதிக புள்ளிகள் 03 வீதம் வழங்கப்படும்.

3.3. அனுபவம்

மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இலுள்ள கண்காணிப்பு அலுவலர் ஒருவராக இருந்த ஒவ்வொரு வருட திருப்திகரமான சேவைக்கும் 02 புள்ளிகள் என்ற வீதத்தில் ஆகக் கூடியது 40 புள்ளிகளிற்கு உட்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.

குறிப்பு: சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றிற்கான புள்ளி வழங்கும் செயற்பாடானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட பரீட்சிப்புச் சபையினால் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகளின் சேவை மூப்பு மற்றும் அனுபவம் தொடர்பாக உள்ளடக்கப்படும் புள்ளிகள் அவ் அலுவலரின் பிரத்தியேகக் கோப்பினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இங்கு வேண்டுமென்றே போலியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரியவருமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டு **விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் அவ்விண்ணப்பங்களை சான்றுப்படுத்தும் திணைக்களத் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.** தனியாள் கோவையின் மூலம் நிரூபிக்கப்படாத தகைமைகள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

4. இந்நோக்கத்திற்காக நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை **2025 ஒக்டோபர் மாதம்** கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் ஒருங்கிசைவுடன் இப் பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அதிகாரம் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

5. தகைமைகள் :-

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்புத் தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக விண்ணப்பிக்கும் பொருட்டு பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.1. விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலுள்ளவாறு **(2025.08.11)** மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I இல் ஆகக்குறைந்தது 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினை நிறைவு செய்திருக்கும் ஓர் அலுவலராக இருத்தல் வேண்டும்.

5.2. அத்திகதிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்

5.3. உரிய திகதியில் குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை முழுமைப்படுத்தியிருத்தல்.

6. **விண்ணப்பிக்கும் முறை :-**

**(அ)** இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டியதுடன், அதனை A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உள்ளடக்கியதாக தயாரித்து பரீட்சார்த்தியால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 05 தொடக்கம் 09 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதியை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் **இல.10** தொடர்பில் குறிப்பிடப்பட்ட அனுபவ உறுதிப்பாட்டிற்கு பொருத்தமான கடிதங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட அனுபவ ஒழுங்கில் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திற்கொள்ளவும். கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும் சேவைக்காலத்திற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். முழுமைப்படுத்தப்படாத மற்றும் மாதிரிப் படிவத்துக்கு அமையாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பு எதுவுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பதாரி உரிய விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

**(ஆ)** இவ் எழுத்துப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்குச் சேர்ந்த மொழி மூலமாகவோ அல்லது வேறு அரச கரும மொழி மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற முடியும். **பரீட்சார்த்தி தான் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழியிலேயே விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.** விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்களில் அவற்றுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுவது அவசியமாகும்.

**(இ)** உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் உரிய திணைக்களத் தலைவர் / மாகாண அமைச்சு செயலாளரின் ஊடாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 393/48, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு 2025.08.11 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு திறமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்கான பரீட்சை- 2025"** எனக் குறிப்பிடல் வேண்டும்.

**(ஈ)** அலுவலர்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்த அதே தினத்தில் உரிய திணைக்களத்தின் / அமைச்சின் உரிய அலுவலக முத்திரை இடுதலும் அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களையும் விண்ணப்பத்தில் இல. 19 பிரிவினையும் சான்றுபடுத்தியும் மற்றும் சான்றுபடுத்திய திகதியைக் குறிப்பிட்டும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் மேற்படி முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தலும் திணைக்களத் தலைவரின் / மாகாண அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும்.

**(உ)** கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட முறை சபை ஒன்றின் சேவைக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள / சேவைக்காக பணிவிடுப்புப் பெற்றுள்ள அலுவலர்களின் விண்ணப்பப்படிவங்களை சான்றுபடுத்தி சமர்ப்பிக்கும் போது குறித்த மாகாண அமைச்சு செயலாளர் மேற்படி அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

**(ஊ)** முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளும் இவ் அறிவித்தலில் தரப்பட்டுள்ள முகவரி தவிர்ந்த வேறு நபர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**(எ)** பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும் ஒவ்வொரு அலுவலர் தொடர்பாகவும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் பற்றிய, விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல், வடக்கு மாகாண இணையத்தளத்தில் **(www.np.gov.lk)** வெளியிடப்படும்.

(ஏ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் வேளையில் விண்ணப்பதாரியின் பதவியும் சேவை நிலையமும் பரீட்சையுடன் தொடர்புறும் சகல விடயங்களுக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் மாற்றங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

7. **பரீட்சைக்கட்டணம்:-**

**பரீட்சைக் கட்டணம் ரூபா 600/=** ஆகும். "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் என்ற பெயருக்குக் கிடைக்கக் கூடியவாறாக **வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில்** செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பபடிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். **பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்வதானது பிரயோசனமானது. இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை மீளப்பெறுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

8. **பரீட்சைக்காக அனுமதித்தல் -**

**(அ)** எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவர்க்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சையின் போது பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சார்த்திகள் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

**(ஆ)** பரீட்சார்த்திகள் தமக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும்.

**(இ)** பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 03 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பிரதியுடன் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடன் ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக்கூடும்.

**(ஈ)** எழுத்துப் பரீட்சையின் புள்ளி மற்றும் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றுக்காக வழங்கப்படும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம், செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்குமுரிய பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கைப்பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு** - பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்பதனை ஏற்றுக்கொண்டதாகக் கருதமுடியாது.

9. பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காகப் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களை அணியாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும்.

அதேபோன்று ஆளடையாளத்ததை சான்றுபடுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

10. **பிழையான தகவல் அளிப்பதற்கான தண்டனை :-**

**(அ)** இப் பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்குத் தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

**(ஆ)** பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை எனத் தெரியவந்தால் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக தெரியவந்தால் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

**(இ)** பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு சகல பரீட்சார்த்திகளும் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும் அவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

11. **நியமனத்திற்காக தெரிவு செய்தல் :-**

எழுத்துப் பரீட்சையில் ` பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகள், சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றிற்கு இணங்க திறமை அடிப்படையிலான ஒழுங்கிலேயே நிரப்பப்படவுள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு உட்பட்டு பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவார்கள். (எழுத்துப் பரீட்சையில் குறைந்தபட்சம் 40 புள்ளிகளை பெறுவது கட்டாயமாகும். அவ்வாறு 40க்குக் குறைவான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்காக தகைமை பெறமாட்டார்கள்)

12. பரீட்சையில் சித்திபெறும் எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அந்நியமனம் வழங்கும் சந்தர்ப்பத்தில் வலுவிலிருந்த ஒழுங்கு விதிகள் மற்றும் ஏற்பாடுகளின்படி நியமன்ம் பெறுவதற்கு தகைமையற்றவராகக் கருதப்பட்டால் அல்லது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்தியற்றதாகக் கருதப்பட்டால் அவருக்கு நியமனம் வழங்காதிருக்கும் உரித்து வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவைச் சார்ந்திருக்கும்.

13. நிரப்பப்படவுள்ள வெற்றிட எண்ணிக்கையை அல்லது ஏதேனும் வெற்றிடத்தினை நிரப்பாது விடுவதனைத் தீர்மானிப்பதற்கும் அத்துடன் இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயத்தினை நிர்ணயிப்பது தொடர்பில் செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

14. இச்சுற்றிக்கையில் தமிழ், சிங்களமொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

*“ 16/2025 ஆம் இலக்க, 2025.07.11ம் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கையைத் தழுவியதாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.”*

**ஆழ்வாப்பிள்ளை சிறி**
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
18.07.2025

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்